REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 17உ திங்கள் (31—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 18உ செவ்வாய் (1—1—57) [இதழ் 175

வாக்குப் பதிவில் திருட்டுத்தனம்: தடுப்பதற்குப் புதிய முறை

புதுடில்லி, டிச. 29—

வருகிற பொதுத் தேர்தலில் திருட்டுத்தனமாக வாக்குப்பதிவு செய்வதைக் கண்காணித்துத் தடுப்பதற்கான பல வழி முறைகள் குறித்துத் தலைமை தேர்தல் அதிகாரி சில குறிப்புகளை வழங்கியிருக்கிறாராம்.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலுமுள்ள அதிகாரிகள், அந்தந்த இடங்களில் போட்டியிடும் அபேட்சகர்களின் ஒத்துழைப்புடன் பலதிறப்பட்ட வாக்காளர்களின் அடையாளத்தைக் கண்காணித்

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழக அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க!

7 பேர் கொண்ட தேர்வு குழு

பிப். 10: கோவையில் சிறப்பு மாநில மாநாடு

பொதுத் தேர்தல் குறித்து கழகத்தின் முக்கிய முடிவுகள்

சேலம் நகரில் செயற்குழு, பொதுக்குழுக் கூட்ட விவரங்கள்

(நமது தனி நிருபர்)

சென்னை, டிச. 31—

வருகிற பொதுத் தேர்தலில், தி. மு. கழகம் 150 இடங்களில் போட்டியிடும் என்ற தேர்தல் ஆய்வுக் குழுவின் முடிவினை ஒட்டி, கழக அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதற்காக ஏழுபேர் கொண்ட தேர்வுக் குழு (Adhoc Committee) ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று, சேலம் நகரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழு மேற்கொண்ட முடிவுகளில் தலையாயது இந்தத் தேர்வுக் குழு நியமனமாகும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தலைவராகக்கொண்ட அந்தக் குழுவில் தோழர்கள் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மதுரை-எஸ். முத்து ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர், தேர்தல் ஆய்வுக் குழுவின் கருத்துரைகளையும் முடிவுகளையும் ஆதாரமாகக்கொண்டு, கழக அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்து, சனவரி இரண்டாம் வாரத்திற்குள் அறிவிப்பர் என்று தெரியவருகிறது.

பொதுக் குழு மேற்கொண்ட மற்றுமொரு முக்கியமான முடிவு, வரும் தேர்தலை ஒட்டி, 1957-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், 10-ம் நாள் ஞாயிறன்று, கோவையில் கழகத்தின் சிறப்பு மாநில மாநாடு ஒன்று நடத்துவது என்பதாகும்.

செயற்குழு:

தி. மு. கழக மத்திய செயற் குழுக் கூட்டம் (Central Working Committee) 29—12—56 சனியன்று பிற்பகல் 2 மணி அளவில் சேலம் சென்ட்ரல் டாக்கீசிற்கு எதிரில் உள்ள தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நடவடிக்கைகள் பற்றியும் வரும் பொதுத் தேர்தல் பற்றியும் விவாதிக்கப்பட்டது. பொதுக்குழுவிற்கான தீர்மானங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மாலை 6-30 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

பொதுக்குழு:

தி. மு. கழகப் பொதுக் குழுக் (General Council) கூட்டம் 30—12—56 ஞாயிறன்று சேலம் அன்னதானப் பட்டி (27-வது வட்டம்) பிட்டா ரைஸ் மில் கட்டிடத்தில் நடைபெற்றது.

வரவேற்பு:

பொதுக் குழு, செயற்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக மாநிலமெங்கணுமிருந்து வந்த தலைவர்களையும், பொதுக்குழு உறுப்பினர்களையும் சேலம் மாவட்ட, நகரக் கழகத் தோழர்கள் சிறப்பாக வரவேற்றனர்.

29-ந் தேதி செயற்குழு 30-ந் தேதி பொதுக்குழு, மாலையில் பொதுக்கூட்டம் ஆகியவற்றை ஒட்டி, சேலம் நகரமெங்கும் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்தோரை சேலம் ஜங்ஷன், டவுன் இரயில் நிலையங்களிலும் பஸ் நிலையத்திலும் சேலம் தோழர்கள் காத்திருந்து வரவேற்று, கூட்டம் நடைபெறும் கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

துவக்கம்

30-ந் தேதியன்று காலை 10 மணியளவில் பொதுக் குழுக் கூட்டம் துவங்கிற்று.

அனுதாபம்

கூட்டத் துவக்கத்திலேயே பொதுச்செயலாளர் அவர்கள், தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனர், டாக்டர் அம்பேத்கார், நாதசுர மன்னர் திருவாடுதுறை இராசரத்தினம் ஆகியோரது மறைவு குறித்துக் குறிப்பிட்டு, அவர்களது மறைவு கழகத்திற்கும் நாட்டுக்கும் எத்தனை பெரிய ஈடுசெய்ய முடியாத நஷ்டம் என்பதையும் எடுத்துரைத்து, அவர்கள் மறைவுக்கும், அரியலூர் விபத்தில் உயிரிழந்தோருக்கும் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மூன்று நிமிட நேரம் மௌனமாயிருந்து அனுதாபம் தெரிவித்துக்கொண்டனர்—தீர்மானத்தை நிறைவேற்றினர்.

முன்னைய நடவடிக்கை

பின்னர், பொதுச்செயலாளர் ஆணைக்கு இணங்க, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், சென்ற பொதுக்குழு நடவடிக்கைகளையும் செயற்குழு நடவடிக்கைகளையும், மாநில மாநாட்டு நடவடிக்கைகளையும் வாசித்தார்.

அன்று முதல்

அடுத்து, பொதுச்செயலாளர் அவர்கள் சென்ற பொதுக் குழுவிலிருந்து இந்தப் பொதுக் குழு வரையுள்ள கழக நடவடிக்கைகளையும் மாநில மாநாட்டு முடிவுகள் காட்டில் தோற்றுவித்துள்ள விளைவுகளையும் விவரித்துக்கூறி, கழகம் தேர்தலில் ஈடுபடுவதை ஒட்டி நிதி திரட்டுதல் முதலிய விஷயங்களில் உறுப்பினர்களின் கருத்துக்களைக் கோரினர்.

பலரும்

தோழர்கள் கே. கே. நீலமேகம், ஜி. பி. சோமசுந்தரம், கோவை இராசமாணிக்கம், மதுரை எஸ். முத்து, அம்பில் தருமலிங்கம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., என். எஸ். இளங்கோ, டி. பி. மூர்த்தி, அ. பொன்னம்பலனர், டி. வி. முத்துக்கிருட்டிணன், ஈ. வே. கி. சம்பத், பெங்களூர் எஸ். வி. பதி, முல்லை சத்தி, இ. ல. ம. சௌந்தரபாண்டியன், டி. என். சம்பந்தம், கி. மனோகரன், கே. கோவிந்தசாமி, டபிள்யூ. டி. துரைசாமி, மா. குருசாமி முதலியோர் தேர்தலில் ஈடுபடும் நிலை குறித்தும், நிதி திரட்டுவது குறித்தும் தங்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கினர்.

இடைவேளை

அத்துடன், பகல் உணவுக்காக, 2 மணியளவில் பொதுக் குழுவினர் கலைந்தனர்.

மீண்டும் அரை மணி நேர இடைவேளைக்குப் பின், மாலை 2-30 மணியளவில் கூட்டம் துவங்கிற்று.

பொதுச்செயலாளர் அவர்கள், உறுப்பினர் பலரும் வழங்கிய கருத்துரைகள் குறித்துக் குறிப்பிட்டு, தீர்மானங்களை ஆலோசனைக்கு வைத்தார்.

தீர்மானங்கள்

தீர்மானங்கள் பலவும் விவாதிக்கப்பட்டு, ஒருமனதாக நிறைவேறின. (விவரங்கள் அடுத்து வரும்.)

தீர்மானங்கள் நிறைவேறியதும், பொதுச்செயலாளர் முடிவுரை பகன்றார்.

சேலம் மாவட்ட கழகச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் நன்றி நவில கூட்டம் 6 மணியளவில் இனிது முடிவுற்றது.

பொதுக் குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை — தங்குமிடம், வசதிகள், உணவு, சிற்றுண்டி ஏற்பாடுகள் — முதலியனவற்றை சேலம் தோழர்கள், போற்றத்தகு முறையில் வெகுசிறப்பாகச் செய்திருந்தனர்.

நகரச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், கழகத் தோழர்கள் பம்பரமாய்ச் சுற்றிப் பணியாற்றி, பலரின் பாராட்டுதலையும் பெற்று மகிழ்ந்தனர்.

ஐம்பதாயிரம் மக்களின் விடுதலை முழக்கம்

சேலம் நகரில் மாபெரும் கூட்டம்

அண்ணா, பொதுச்செயலாளர் உள்ளிட்ட கழக முன்னணி வீரர்களின் இலட்சிய விளக்கம்

தேர்தல் நிதிக்கு ரூ. 1,346-12-9 தரப்பட்டது

சேலம், டிச. 31—

'திராவிட நாடு திராவிடருக்கே', 'வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக,' 'இந்தித் திணிப்பு ஒழிக', 'காங்கிரஸ் எதேச்சாதிகாரம் ஒழிக', 'எங்கள் வாக்கு தி. மு. கழகத்திற்கே! எங்கள் வாக்கு உதய சூரியனுக்கே', 'அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை' என்ற முழக்கம், சேலம் நகரைக் குலுக்கிற்று; சூழநிற்கும் மலைகளில் மோதி எதிரொலித்து, விண்ணதிரச் செய்தது!

அந்த முழக்கத்தை எழுப்பியவர்கள், சேலம் வி. மார்க்கட் திடலில் நேற்று மாலை தி. மு. க. கூட்டத்தில் கூடியிருந்த 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களாவர்.

எல்லா நகரங்களுக்கும் எளிதில் கிடைக்காத அரியதோர் வாய்ப்பு —தி. மு. கழகத் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் காணும் வாய்ப்பு, நேற்று சேலம் நகரத்திற்குக் கிடைத்தது.

நகரில், இருநாட்களாக நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழு, பொதுக்குழு முடிவுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவலினால் தூண்டப்பட்டவர்களாய், எண்ணற்ற தாய்மார்கள் உட்பட 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் நேற்று மாலை வி மார்க்கெட் திடலில் குழுமியிருந்தனர்.

கூட்டத்தில், எண்ணற்ற வெளியூர் தோழர்கள், திருச்சி, ஈரோடு, கோவை போன்ற நகரங்களிலிருந்தும் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் காணப்பட்டனர்.

கூட்டம் சுமார் 6-15 மணியளவில் துவங்கிற்று.

கூட்டத்திற்கு சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமைதாங்கினார்கள்.

அழகுற அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த விசாலமானதோர் மேடையில், அண்ணா, பொதுச்செயலாளர், மற்றும் கழக முன்னணி வீரர் பலரும் அமர்ந்திருந்த காட்சி மக்களுக்குப் பெருமகிழ்ச்சியளித்தது.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள், கழகம் தேர்தலில் ஈடுபடும் நோக்கம் குறித்து விளக்கிவிட்டு, 'உங்கள் வாக்கு யாருக்கு?' என்ற கேள்வியை எழுப்பியபோது மக்கள், 'தி. மு. கழகத்திற்கே— உதய சூரியனுக்கே,' என்று முழக்கமிட்டனர்.

கூடியிருந்த மக்கள், மேலும் இயக்கத்தில் கண்டிருப்பதுபோன்றும் விடுதலை முழக்கமிட்டு, தங்கள் உறுதிப்பாட்டையும் ஆர்வத்தையும் எழுச்சியையும் காட்டிக்கொண்டனர்.

அடுத்து தோழர்கள் எஸ். முத்து, ஏ. கோவிந்தசாமி எம் எல். ஏ, சி. பி. சிற்றரசு, அம்பில் தருமலிங்கம், நில்லை வில்லாளன், என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஈ வெ. கி. சம்பத் ஆகியோர் நாட்டு நிலைகளையும், தேர்தலில் கழகம் ஈடுபடுவது குறித்தும், காங்கிரசின் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 31—12—'56 திங்கள்

மகிழ்ச்சியும்! வேதனையும்!

தோன்றிய காலந்தொட்டு வீட்டு மொழியாகவும் நாட்டு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கோலோச்சிவந்த நம் அரும் தமிழ்மொழி, ஏகாதிபத்திய அரசியல் ஆதிக்கத்தால் தன்னிலையிலிருந்து ஒதுக்கப்படுவதற்கு முன்னரே, மற்ருெரு முரண்பட்ட வாழ்க்கை முறையை உள்ளடக்கமாகக் கொண்டு மோதத் தொடங்கிய பேச்சு வழக்கற்ற மற்ருெரு மொழியின் சதிச் செயலால் மெள்ள மெள்ள சரியத் தொடங்கிற்று. அதன் விளைவாக தமிழ் மொழியின் வளர்ச்சியும் தேயத் தொடங்கிற்று.

அத்தேய்வு, நமது மொழியை முழுதும் அழித்துவிட முடியாது, தமிழ்ப் புலவர்களும் கிறித்துவ, இஸ்லாமிய தமிழ்ப் பெரும் அறிஞர்களும் தடுத்துப் பேணி வளர்த்துவந்தனர். அவர்கள் அரும்பணிக்குத் தமிழ்மக்கள் என்றும் கடமைப் பட்டுள்ளனர்.

இன்று தமிழ் மொழி மீண்டும் அரியாசனம் ஏறுகிறது—ஏற்றுவிக்கப்படுகிறது.

இப்பெரும் பேறு தமிழ் மொழிக்கு மட்டுமே கிடைத்திருக்கும் ஒன்றன்று. மொழியின்மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய பெரும் பேறு ஆகும்.

தமிழ்மொழி ஆட்சிமொழியாகும் நன்னிலைக்காகத் தனித்த முறையில் எந்த ஒரு கட்சியும் உரிமை கொண்டாடுவதில் பொருள் இல்லை. அவ்வாறு உரிமை கொண்டாடல், தமிழ் மக்கள் அனைவருக்கும் உரிய பொது உரிமையாகும்.

இருந்தாலும், தமிழ் ஆட்சி மொழியாக்கப்படும் இந்நாளில் தமிழ் காக்கத் தம்மரும் உயிரை ஈந்த வீரர்களை நினைக்காமல் இருப்பதற்கில்லை.

ஆச்சாரியார் கொடிய ஆட்சியில் 'தமிழ் வாழ்க' என முழங்கினதற்காகவே சிறை வாழ்வும் பெற்று, தண்டனைக் காலத்திலேயே உயிரையும் தியாகம் செய்த தாளமுத்து, நடராசன் எனும் பெயரிய இரண்டு தமிழ்ப் பெரும் காவலர்களுக்குத் தமது வீர வணக்கத்தைச் செலுத்தத் தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளனர்.

அதே போன்ற , பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சியில், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதற்காகவும் உண்ணுநோன்பு இருந்து உயிர் நீத்த முதியவர் சங்கரலிங்கனார் அவர்களுக்கும் தமிழ் மக்கள் வீர வணக்கம் செலுத்த வேண்டும்.

இத்தொடர்பில், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் எனக்கோரி முதியவர் சங்கரலிங்கனார் எழுபத்தாறு நாட்கள் உண்ணுநோன்பு இருந்த நேரத்தில் கையாண்டி செய்த பச்சைத் தமிழர் காமராசர், இப்பொழுது ஏன் தமிழை ஆட்சி மொழியாக்க. இச்சை கொண்டார்? அவ்வாறு இச்சை கொள்ளுவதற்கு எது தூண்டுதலாக அமைந்தது?—என்றெல்லாம், எவருக்கும் கேட்கத் தான் தோன்றும்! நிற்க,

தமிழ் காக்கக் கிளம்பிய ஆயிரம் ஆயிரம் தமிழ் மாவீரர்கள், ஆச்சாரியார் ஆட்சியில் வெஞ்சிறையில் தள்ளப்பட்ட கொடுமையைத் தமிழ் மக்கள் மறந்துவிடுவதற்கில்லை. அவ்வீரர்கள் அன்று செய்த தியாகம் இன்று வெற்றிபெறுகிறது என்று எண்ணும்தோறும் எண்ணும்தோறும், நம்மை அறியாமலே நமக்கு வெற்றிக் களிப்பு ஏற்படுகிறது. இவ்வாறு நாம நமது முன்னோர் பணி ஓரளவு வெற்றி பெறுவது கண்டு உள்ளூர மகிழ்வதுகூட, சில அழுக்காறு படைத்தவர்களுக்கு ஆத்திரமூட்டக்கூடியதாக இருக்கும்.

சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழியாகத்தான் இன்று தமிழ் ஆக்கப்பட்டு இருக்கிறது. தமிழ் மொழி, தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் தமிழ் நாட்டு ஆட்சி மொழியாக இன்னும் ஆகவில்லை. அதற்கான வாய்ப்பு அடுத்த ஐந்தாண்டுக்குப் பிறகு நடைபெற வேண்டிய தேர்தல் நாளில்தான் கிட்டுமோ என்னவோ?

தமிழ், மீண்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டது எத்தகைய உளப்பூரிப்பைத் தருவதாக இருக்கிறதோ, அதனினும் கூடுதலான வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது, அம்மொழிக்குக் கட்டப்பட்டுள்ள வரம்பு.

அதாவது சென்னை மாநிலத்தில் தமிழ் மொழிக்கு மட்டுமே ஆட்சி மொழி என்ற உரிமை வழங்கப்பட்டு இருக்கவில்லை. மற்ருெரு வேற்று மொழிக்கும் இங்கு ஆட்சி மொழி நிலையில் கோலோச்சும் உரிமை வழங்கப்பட்டு உள்ளது.

அவ்வேற்று மொழிக்கு அத்தகைய ஆட்சி மொழி உரிமையைத் தமிழ்மக்கள் அளிக்கவில்லை.

தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திவரும் அவ்வேற்று மொழியினர், தாமாக அவ்வுரிமையைத் தங்கள் மொழிக்கு அளித்துக்கொண்டனர்.

இங்கு, தமிழ் மக்களில் அவர்கள் 'அரசியல் அடிமை'களாக இருந்துவருபவர்களும், அதற்கு ஆதரவு காட்டிவருகின்றனர்.

ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக்கப்பட்டது ஆங்கில துரைமார்களால்.

தமிழ் நாட்டின் அரசியல், வேற்று மொழியினரின் பிடியில் சிக்கிக் கிடக்கிறது.

எனவே, அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்திவரும் அம்மொழியினர், தங்களுடைய தாய் மொழியை நமமீது ஆதிக்கம் செலுத்த ஏவி உள்ளனர். அதாவது, இங்கு இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியான இந்திக்கும், நமது ஆட்சி மொழியான தமிழுக்கும் மோதுதல் ஏற்பட்டேதீரும் என்பதில் எவருக்கும் ஐயமிருக்கத் துளியும் நியாயம் இல்லை.

காலப்போக்கில் அம்மோதுதல் வன்மை பெறும்—விரிவும் பெறும்.

அம்மோதுதலிலிருந்து தமிழ் மொழிப் பாதுகாப்புக்காக வேலியமைக்க விருப்பமெழுந்தாலும், வகை கிடையாது இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு.

அந்நிலையில், தமிழும் ஆட்சி மொழிதான் என்ற சட்ட நூலை நோக்கி நோக்கி, நாம் ஆறுதல் பெறுவதைத் தவிர்த்து நமக்கு வேறு வழியில்லை.

அவ்வாறு சட்ட நூலைப் பார்த்துப் பார்த்து, நமது துயரத்தைக் களைந்துகொண்டு, இந்தி மொழி தரும் வேதனையினுல் ஏற்படும் சீற்றத்தைத் தணித்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று, அன்று ஆட்சியிலிருப்பவர்களும் அடிமைமோகிகளாக இருப்பார்களானுல், சொல்லத்தான் போகின்றனர்.

இந்த பயங்கரமான எதிர்காலத்தை எண்ணும்பொழுதுதான், தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டதால் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுவதுடன், வேதனையும் ஏற்படுகிறது.

தண்ணீரை இறைக்கப் புதுவகைக் கருவி!

நீரியல் சக்தியைக்கொண்டு இயங்கும் விசித்திரம்!

யுக்ரேனிய விஞ்ஞானப் பேரவையின் கூட்டு உறுப்பினர் பேராசிரியர் ஜல். என். கிரமரென்கோவின் தலைமையில் சில விஞ்ஞானிகள், நீர் இறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் புதுவகை நீரியல் பொறி ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

பெரிய பண்ணைகளின் தேவையையும், நீர்ப்பாசனத் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது.

தேவைப்படும் நீர் முழுவதையும் அளிக்கவல்ல இப்புதுவகை சாதனங்கள், எளிய அமைப்புடையவையாக இருப்பதுடன், குறைந்த செலவில் இயக்கக்கூடியவையாகவும் உள்ளன.

குழாயில் வேகமாக ஓடும் நீரை திடீரென்று தடுத்து நிறுத்தினுல், நீரியல் சக்தி தோன்றுகிறதல்லவா? இந்த சக்தியைப் பயன்படுத்திக்கொண்டுதான், இந்த சாதனம் இயங்குகிறது.

இது, தானுகவே இயங்கும் சாதனமாகும். இதற்கு எரிபொருளோ, மசகுப் பொருளோ தேவையில்லை. இந்த சாதனத்தை அடிக்கடி பழுதுபார்க்க வேண்டும் என்ற அவசியமுமில்லை.

மேட்டூரின் எதிர்காலம்

பெரியதோர் மாறுதலுடன் தோற்றமளிக்குமாம்

மத்திய, மாநில சர்க்கார்களின் உதவியுடன், கூடியவிரைவில் மேட்டூரில் பல தொழில் நுணுக்கக் கலூரி (பாலிடெக்னிக்) ஒன்றை நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக 'மேட்டூர் கெமிகல்ஸ்' நிறுவனத் தலைவர், ஊழியர் சங்கத்தின் ஆண்டு விழாவின் போது கூறியுள்ளார்.

ரூ $3\frac{1}{2}$ கோடி செலவில் காகிதத் தொழிற்சாலை ஒன்று மேட்டூரில் அமைக்கப்படவிருப்பதாகவும், அதற்கான தகுந்த இடம் விரைவில் தீர்மானிக்கப்படுமென்றும் விழாவிற்குத் தலைமை தாங்கிய கலெக்டர் கூறியுள்ளார்.

'இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் அலுமினியத் தொழிற்சாலையும் செயல்பட ஆரம்பித்துவிட்டால், மேட்டூர் பகுதி முழுமையும் பெரும் மாறுதலுடன் தோற்றமளிக்கும்,' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கங்கள் வெற்றி பெற!

ஈ. வெ. கி. சம்பத் கூறும் வழிகள்

திருப்பரங்குன்றம், டிச. 27—

"இந்த நாட்டில் நூற்றுக்கு எண்பது பேராக இருக்கும் உழவர்களுடைய கடன் தேவைகளில் 6 சத விகிதத்தைத்தான் சர்க்கார் நிறுவனங்களும் மற்றக் கூட்டுறவு இயக்கங்களும் உதவுகின்றன. இது தவிர, மேற்கொண்டு 1 சத விகித உதவி வணிக பாங்கிகளால் தரப்படுகிறது; மீதி 93 சத விகித உதவியையும் ஏழை உழவர்கள் பெறுவது எப்படி?

"நமது சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில், உழவர்களுக்கு ரூ. 70 கோடி கடன் தேவைப்படுகிறது. இந்த ரூ. 70 கோடியில், சென்னை சர்க்கார் நிறுவனங்களாலும் மற்றக் கூட்டுறவு இயக்கங்களாலும் தரப்படும் தொகையோ ரூ. 9 கோடி மட்டுந்தான். இந்தத் தொகை போதாதென்று கண்டறிந்து சென்னை சர்க்கார் மேலும் 400 கடனுதவிச் சங்கங்களை ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருப்பது கண்டு மகிழ்கிறோம். இது ஒரு நல்ல முயற்சிதான்,"

என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கடந்த 24-ந் தேதியன்று இங்கு நடைபெற்ற பாண்டிய நாடு கூட்டுறவுப் பயிற்சிக் கழகக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு, மேற்படி கழக விரிவுரையாளர் திரு. சதாசிவம் தலைமை வகித்தார்.

மாணவத் தலைவர் தோழர் பொன்னு சுப்பையா தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வரவேற்று உரை நிகழ்த்தினர்.

தோழர் சம்பத் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஆரம்ப காலத்தில் இராபர்ட் ஓவன் அவர்களால் துவக்கப்பட்ட நாட்களில், கூட்டுறவுக் கழகம் பெருமளவு வெற்றிபெறவில்லை தான். நமது நாட்டில் அது, இன்றைய தினம்தான் ஓரளவு எழுச்சி பெற்றுக்கொண்டு வருகிறது; புரட்சிகரமான பல மாறுதல்களை உருவாக்குகிறது; மற்ற மாநிலங்களையெல்லாம்விட சென்னை மாநிலத்தில் அதிக வெற்றி கண்டு வருகிறது.

"ஆனுல், கூட்டுறவு இயக்கங்கள் பற்றியவிளம்பரங்களும், அறிவிப்புகளும், கற்றறிந்தோரிடையே—அந்தந்துறை அலுவலகங்களிலேதான் காணப்படுகின்றனவே தவிர, எந்த மக்களுக்குக் கூட்டுறவு இயக்கம் பயன்பட வேண்டுமோ அந்த மக்களிடை காணப்படவில்லை; அவர்களிடையே இதுபற்றிய விளம்பரங்களே கிடையாது. அவர்களிடையே இவற்றை விளம்பரம் செய்வதற்கு ஏற்ற இடம் சந்தை தான். இந்த முறை, மட்டரகமானதாகச் சிலருக்குத் தோன்றலாம்; என்றுலும்கூட, திட்டத்தால் பயன்பெற வேண்டிய மக்கள் கூடும் இடம் அதுதானே?

"அறுவடைப் பொருள்கள்மீது கடன் கொடுப்பதுடன், கூட்டுறவு இயக்கங்கள், அவற்றைப் பக்குவப்படுத்தும் நிலையங்களையும், விற்பனை நிலையங்களையும் நடத்தவேண்டும்."

'கூட்டுறவு இயக்கமும் நம் நாட்டு பொருளாதாரமும்,' என்ற தலைப்பில் பேசிய அவர், மேலும் தொடர்ந்து பேசுகையில், 'எந்த இயக்கத்திலுமே நல்லோரும் கெட்டோரும் இருக்கத்தான் செய்கிருர்கள்; கூட்டுறவு இயக்கத்திலும் சில தீயோர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்; ஆனுல், அப்படிப்பட்டவர்களையெல்லாம் சந்திப்பதற்கும் சமாளிப்பதற்கும் நீங்கள் தயாராக இருக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மாணவச் செயலாளர் தோழர் அனீபா நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

மேகக் கூட்டம்போல் தோன்றும் வெட்டுக் கிளிகளின் அட்டூழியம்

6-வாரங்களில் 45-இலட்சம் பவுன் மதிப்புள்ள சாகுபடியை அழித்த விபரீதம்

'படையெடுப்பை' ஒடுக்கக் கூட்டு நடவடிக்கை

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளில், வெட்டுக்கிளிகளால் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள சாகுபடி நஷ்டமடைகிறது. எனவே, வெட்டுக்கிளிகளை ஒழிப்பதற்குப் பல நாடுகள் கூட்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன.

வெட்டுக்கிளிகளால் சுமார் 60 நாடுகளுக்கு நஷ்டமேற்படுகிறது. அவை கூட்டம் கூட்டமாகப் பறக்கும்; ஒரு கூட்டத்தில் சுமார் 10 கோடி பூச்சிகள் இருக்கலாம். ஆகாயத்தில் பறக்கும்போது, மேகக் கூட்டம்போல் அவை தோன்றும்; நாளொன்றுக்கு சுமார் 3,000 டன்கள் சாகுபடியை அழித்துவிடுமாம்.

அல்ஜீரியா, எதியோப்பியா, மொராக்கோ, கென்யா, இந்தியா, ஈரான், ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்தான் ஆண்டுதோறும் சேதமேற்படுகிறது.

வெட்டுக்கிளி படையெடுக்கும் பிரதேசத்தில் 31 கோடி மக்கள் வாழ்கிருர்கள்.

வெட்டுக்கிளிகளை ஒழிக்க பணச் செலவு அதிகமேற்படுகிறது; ஆனுல், அவற்ருல் ஏற்படும் நஷ்டத்தைக் கவனிக்கையில் செலவு பெரிதாகத் தோன்றுகிறது.

1942-ல், தடுப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 20,00,060 பவுன்கள் செலவிடப்பட்டது.

1954-ல், பிரெஞ்சு, மொராக்கோவில் ஆறே வாரங்களில் 45,00,000 பவுன்கள் மதிப்புள்ள சாகுபடியை வெட்டுக்கிளிகள் அழித்தன.

சந்தனக்கட்டை விற்பனை : ரூ. 7 இலட்சம் வருமானம்

நடைமுறை ஆண்டில் முதல் ஆறு மாதத்தில் 749 டன் சந்தனக் கட்டை விற்பனையின் மூலம் ரூ. 30,52,000 கிடைத்துள்ளது என்றும், ஜூலை முதல் டிசம்பர் மாதம் முடிய 660 டன் சந்தனக் கட்டை விற்பனையின் மூலம் ரூ 37,59 432 கிடைத்துள்ளது என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், நர்சரி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதற்காக, பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும், இஷ்டப்பூர்வ சேவா நிறுவனங்களுக்கும் இந்திய சர்க்கார், மானிய உதவியாக மொத்தம் ரூ. 6,31,892 வரை வழங்கியுள்ளனர்.

இராயப்பேட்டை தி. மு. க. கூட்டத்தில் அண்ணு

தேர்தல் நிதிக்குப் பெண்கள் படிப்பக அன்பளிப்பு

சென்னை-இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் 26-12-56 அன்று கதீட்ரல் சாலையில் உள்ள திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பெய்துகொண்டிருந்த பெருமழையையும் பொருட்படுத்தாமல், பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

தோழர் ஏ. எல். கே. சாமி முன்மொழிய, தோழர் பொ. சண்முகம் வழிமொழிய தோழர் கோ. இளவரசு கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர்.

தோழர் ம. கி. இராமலிங்கம் சிறிது நேரம் பேசியதும், தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், திராவிட நாடு இலட்சியம் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு தேடுவதாகும் என்று ஒலமிடுவோருக்குப் பதிலளிக்கும்வகையில் பேசினுர்.

பின்னர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ. அவர்கள், கழகம் தேர்தலில் ஈடுபடும் இந்த நேரத்தில், ஆட்சியிலமர்ந்திருக்கும் காங்கிரஸ் மந்திரிகள், எந்தெந்தவகையான தப்புப் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று விளக்கினுர்.

அடுத்து தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள், தேர்தலில் கழகத் தோழர்களது கடமை குறித்து விளக்கினுர்

இறுதியாக அண்ணு அவர்கள் காங்கிரசின் நிலை குறித்தும், கழகத்தின் இலட்சியம் குறித்தும் அரியதோர் கருத்துரை ஆற்றினுர்கள்.

அண்ணு அவர்களுக்கும், இதர தோழர்களுக்கும் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் அண்ணு அவர்களிடம் 37-வது வட்ட கிளையின் சார்பில் ரூ. 162-ம், பெண்கள் படிப்பகச் சார்பில் ரூ. 114-8-0 தேர்தல் நிதியாக அளிக்கப்பட்டது.

பெண்கள் படிப்பகச் சார்பில் பானுமதி என்ற ஆறு வயதுச் சிறுமி நிதியளித்தது, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

அண்ணு அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பெய்த பெருமழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் அனைவரும் கட்டுப்பாடாக நின்று, கருத்துரை கேட்டது குறிப்பிடத்தக்கது. (ஏ. கி.)

'பீடித் தொழிலுக்குப் பாதுகாப்புச் சட்டம் வேண்டும்'

சர்க்காருக்குப் பீடித் தொழிலாளர்கள் கோரிக்கை

விருதம்பட்டு, டிச. 28—

பீடித் தொழிலுக்கு உடனடியாகப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவருமாறு சென்னை மாநில சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று, நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற பீடித் தொழிலாளர் பொதுக்கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அண்மையில் சென்னை சட்டசபைமுன் பீடித் தொழிலாளர் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி மறியல் செய்தபோது, ஏராளமான தொண்டர்கள் கைது செய்யப்பட்டது குறித்துக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், விருதம்பட்டு பீடித் தொழிலாளர் சங்கக் கட்டிடத்திலிருந்து ஆயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் திரு. வி. எம் துரைசாமி தலைமையில் ஊர்வலம் வந்தனர்.

மந்தவெளி மைதானத்தில், திரு. வி. எம். கண்ணன் தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில், கைது செய்யப்பட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத்தீர்மானங்களைத் தோழர் அ. திராவிடமணி வாசித்தார். ஆயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்களின் ஒருமித்த ஆரவாரத்திற்கிடையே அவை நிறைவேற்றப்பட்டன. (ஏ. கி.)

பிரிவு நினைவு விழா

இராமநாதபுரம் மாவட்டம் பாகனேரி கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றிய தோழர் அறிவுடைநம்பி, கடந்த 8-ந் தேதியன்று வேலையிலிருந்து நீக்கப்பட்டதையொட்டி, டிச. 10-ந் தேதியன்று, அந்த உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சார்பில் விருந்துபசாரக் கூட்டமும், தலைமை ஆசிரியர் திரு. கே. இராசம் அவர்கள் தலைமையில் பிரிவுபசாரக் கூட்டமும் நடைபெற்றது. டாக்டர் எ. டி. இராமையா, ஆர். எம் கிருட்டிணன், ஜோதிநாயகம் ஆகியோர் தோழர் அறிவுடைநம்பியின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

11-ந்தேதியன்று, பள்ளி இறுதி வகுப்பு மாணவ, மாணவிகளால் தேநீர் விருந்து நடத்தப்பட்டு, பிரிவு நினைவுக் கூட்டமும் நடைபெற்றது.

பள்ளி இறுதி வகுப்பு, இரண்டாம் படிவ மாணவ மாணவிகள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

12-ந்தேதி மாலை 5 மணிக்கு, பாகனேரி தி மு. கழகக் கிளைச் சார்பில் தோழர் அறிவுடைநம்பி அவர்களுக்குத் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது. தோழர் நம்பி அவர்களைப்பாராட்டித் தோழர்கள் பலர் பேசினர்; தி மு கழகத்தைச் சேர்ந்தவர் என்பதுதான் அவ்வேலையிலிருந்து அவர் நீக்கப்பட்டதற்கான காரணம் என்று குறிப்பிட்டனர்.

இது குறித்து தி. மு. கழகக் கிளையும் ஏற்கனவே ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிறகு தோழர் அறிவுடைநம்பி, தி. மு. கழகக் கொள்கையை விளக்கியும், தி. மு கழகத் தேர்தல் நிதிக்குத் தோழர்கள் அனைவரும் இயன்ற அளவு உதவிசெய்யுமாறும் கேட்டுக்கொண்டு உரையாற்றினுர். (ஏ. கி.)

புளியால் தி.மு. கழகத் துவக்க விழா

ஈ. வெ. கி. சம்பத் கருத்துரை

25—12—56 மாலை 6 மணிக்கு திருவாடானை வட்டம் புளியால் தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் வி. விரப்பன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் சட்டக் கல்லூரி மாணவர் தோழர் இராசமாணிக்கம் சிறிது நேரம் பேசினுர்.

அடுத்து, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், மக்கள் வாழ்வு வளம்பெற கழகம் எந்த வகையில் பாடுபடுகிறதென்பதை விவரித்தும், சொற்பொழிவாற்றினுர்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு ஏராளமான கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இரயில் நிலையங்களில்!

'நிருபர்கள் நுழைய அனுமதிச் சீட்டு வழங்கவேண்டும்'

கரூர் பத்திரிகையாளர் சங்கக் கோரிக்கை

கரூர், டிச. 27—

இரயில் நிலையத்திற்குள் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப் படாததால் சிற்சில வேளைகளில் முக்கியமான செய்திகளைக்கூட இழக்க நேரிடுகிறது; எனவே, அக்குறையைப் போக்கும்வகையில், இரயில் நிலையங்களுக்குள் நுழைய நிருபர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குமாறு ஜெனரல் மானேஜரைக் கேட்டுக்கொண்டு, இங்கு கடந்த 24-ந் தேதியன்று, கரூர் சீனிவாசபுரம் சரசுவதி விலாசம் டெக்னிகல் இன்ஸ்டிட்டியூட் கட்டிடத்தில் நடைபெற்ற கரூர் பத்திரிகையாளர் சங்க வருடாந்திரக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில் மேலும், அரசாங்க அலுவலகச் செய்திகளை குறித்து நிருபர்களுக்குத் தேவையான குறிப்புகள் கொடுத்துதவுமாறு உத்திரவிட திருச்சி மாவட்டக் கலெக்டரைக் கேட்டுக்கொண்டும், பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் வசதியாக இருக்கும் வகையில், கரூர் தலைமை தபால நிலையத்தில் மாலை 6 மணிக்கு தபால்களைக் கட்டுமாறு உத்தரவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும், டாக்டர் அம்பேத்கார், இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், மேற்படி சங்கப் புத்தாண்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ஏ-கி)

சென்னை திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக 4-வது ஆண்டு விழா

என்.வி. நடராசன், கண்ணதாசன் கலந்துகொண்டனர்

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை (8-வது வட்டம்) திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக 4-வது ஆண்டு விழா, 24—12—56 மாலை 6 மணிக்கு லாயர் சின்னத்தம்பி முதலி தெருவில், தோழர் மு. நடராசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் ஏராளமான மக்கள் திரண்டிருந்து சிறப்பித்தனர்.

கூட்டத் துவக்கத்தில் செயலாளர் புட்பரத்தினம் ஆண்டு அறிக்கை வாசித்து, அனைவரையும் வரவேற்ருர்.

பின்னர் தோழர்கள் ம நடராசன், பன்னீர்செல்வம் ஆகியோர் பேசினர்.

பின்னர், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகச் சார்பில் ரூ. 30—10—0-ம், 8-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் ரூ. 60ம், எம். ஈ. ஏ. அசோசியேஷன் சார்பில் ரூ. 2-ம் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரிடம் அளிக்கப்பட்டது.

அதற்கு நன்றி தெரிவித்தும் கழகத்தின் தேர்தல் பணியை விளக்கியும், அப்பணி வெற்றிபெற தி. மு. கழகத்தைச் சார்ந்த சார்புக் கழகங்கள் தரவேண்டிய ஒத்துழைப்பையும், நாடான்[illegible] தரக்குறைவு, நிறைம[illegible] ஆட்சிமுறையிலுள்ள அல[illegible]கள் ஆகியவைகளை வி[illegible] தோழர் என். வி. ந[illegible] சொற்பொழிவாற்றினுர்.

தோழர் கண்ணதாச[illegible]கள் வள்ளுவரின் நெறி[illegible] நாட்டின் நல்வாழ்வுக்கு [illegible] காட்டும் அரிய பாதையி[illegible] விளக்கியதோடு, அப்பாதை[illegible] செல்லும் தி. மு. கழகத்தி[illegible] பேராதரவு தருமாறும் கே[illegible] கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப்[illegible] விழா இனிது முடிவுற்றது.

காவேரி நகர் வ[illegible] விளையாட்டு [illegible]

16-12-56-ல், தெ[illegible] பொங்கல் விழா[illegible] காவேரி நகர் வட்[illegible] சார்பில் விளையாட்டுப் [illegible] நடைபெறும். 100 மீட்[illegible] மீட்டர், 2 மைல் ஓட்ட[illegible]கள், குண்டுவீசுதல், நீள[illegible] தாண்டுதல், கயிறு இழுத்த[illegible] ஆப்வார்), வளைப்பந்து ([illegible] காபிட்) சடுகுடு, சிலம்பம்போ[illegible] போட்டிகள் இடம் பெ[illegible] போட்டிகளில் கலந்துகொ[illegible] விரும்பும் வட்டாரத் தோ[illegible] கூடியவிரைவில் 'அரங்க ம[illegible] மன்னன், செயலாளர், வி[illegible] விழா உப்பிலியக்குடி [illegible] திருச்சி மாவட்டம்' என்[illegible] வரிக்கு எழுதிப் பெயர்[illegible] செய்துகொள்ள கேட்டுக்[illegible]ள்ளப்படுகின்றனர்.

திருப்பத்தூர் வட்டத்தில் தோழர் கண்ணதாசன் நிகழ்ச்சிக[illegible]

ஆ. தெக்கூர்

6-12-56 மாலை 6 மணிக்கு, இவ்வூரில் முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், மணிமாறன் ஆகியோர் பேசினர்.

கீழசிவல்பட்டி

14-12-56 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் தோழர் அணு. முத்தையா தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், பெரி. அழகு ஆகியோர் பேசினர்.

சத்துருசங்காரகோட்டை

15-12-56 மாலை 6 மணிக்கு, தோழர் மு. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், வலம்புரி எழிலன் ஆகியோர் பேசினர்.

மருதங்குடி

16-12-56 மாலை 3 மணிக்கு, மருதங்குடியில் நடைபெற்ற அம்பேத்கார் மறைவு அனுதாபப் பொதுக்கூட்டத்தில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் தோழர் கண்ணதாசன் டாக்டர் அம்பேத்காரின் தொண்டினை விளக்கிப் பேசினுர்.

மனையப்பட்டி

16-12-56 மாலை 5 மணிக்கு, இவ்வூர் உழவர் சங்கச் சார்பில் லெ சந்தானம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், ஐந்தாண்டுத்திட்ட அநீதிகளை விளக்கி தோழர் கண்ணதாசன் பேசினுர்.

கண்டரமாணிக்கம்

16-12-56 மாலை 6-30 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் இளமதி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடுவதின் அவசியம் குறித்து தோழர் கண்ணதாசன் விளக்கிப்பேசினுர்.

திருக்களாபட்டி தி. மு. கழகத் துவக்க விழா

17-12-56 மாலை 4 மணிக்கு, திருக்களாபட்டி தி. மு. க.கிளையை துவக்கிவைத்து தோழர் கண்ணதாசன் பேசினுர். விழாவுக்கு திரு. இராமசாமி த[illegible]

எம். சூரக்குடி

17-12-56 மாலை 6 மணிக்[illegible] இவ்வூர் தி. மு. கழகச் சார்[illegible] தோழர் மெய்யப்பன் தலைமை[illegible] நடைபெற்ற பொதுக்கூட்டத்[illegible] தோழர்கள் கண்ணதாசன், [illegible] பழனிநாதன், அ. குருசாமி [illegible]யோர் பேசினர்.

சூரக்குடி காங்கிரஸ் பிரமு[illegible] பஞ்சாயத்துப்போர்டு தலைவ[illegible] திரு. அழகப்பன் அவர்கள் [illegible] கிரசில் இருந்து இன்று[illegible] விலகி தி. மு. கழகத்தில் பணி[illegible]றுவதாக அறிவித்தார்.

காளாப்பூரில் ஊழியர் கூட்[illegible]

18-12-56 மாலை 4 மணிக்[illegible] திருக்கோட்டியூர் தொகுதி தி. மு[illegible] கழக ஊழியர் கூட்டம், காளாப்பூரில் தோழர் ஞா. தியாக அர[illegible] தலைமையில் நடைபெற்றது. திருக்கோட்டியூர் தொகுதியை 4 பகுதிகளாகப் பிரித்து சிங்கம்புணரி பகுதிக்கு தோழர் ப. பாலகிருஷ்ணன், திருப்பத்தூர் பகுதிக்குத் தோழர் வை. கணபதி, தெக்கூர் பகுதிக்குத் தோழர் எம். இப்ருகிம், திருக்கோட்டியூர் பகுதிக்குத் தோழர் கரு.முனியாண்டி ஆகியோர் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர் தோழர் கண்ணதாசன் ஊழியர்களின் கடமை குறித்து விளக்கிப்பேசினுர்.

டாக்டர் அம்பேத்கார், இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு பல ஊர்களை[illegible] சேர்ந்த 200-க்கும் அதிகமான ஊழியர்கள் வந்திருந்த[illegible] காளாப்பூர் தி. மு. கழகத்தார் எல்லோருக்கும்சிற்றுண்டி வழங்கினர்.

சதுர்வேதமங்கலம்

18-12-56 மாலை 6 மணி[illegible] சதுர்வேதமங்கலம் தி. மு. க[illegible] சார்பில் மு அ. ந. அழகு தலை[illegible]யில் நடைபெற்றப் பொதுக்[illegible]டத்தில் தோழர்கள் கண்ணதா[illegible] பெரி. அழகு, கட்டாரி, [illegible]ஞானம் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் தோழர் ஆ[illegible] யப்ப[illegible] மகனுக்கு கண்ணதா[illegible] [illegible]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு க' என்ற எழுத்துக்களும் கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணு 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது வெளியூர்க்கிளைகள்; 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மக்களின் விடுதலை முழக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

..சி ஒழிக்கப்படவேண் ..வசியம் குறித்தும் ..னர்.

பொதுச்செயலாளர் ..ஞ்செழியன் அவர் ..முழு, பொதுக் குழு குறித்தும், தேர்தலில் கழகத்தின் நோக்கம் ..ம் அரியதோர் சொற் ..வாற்றினார்.

..யாக அண்ணா அவர்கள் பெரும் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையே பேச எழுந்தார்.

பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பாக அண்ணா, பொதுச்செயலாளர், மற்றும் பலருக்கும் கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தேர்தல் நிதியாக பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் அண்ணா அவர்களிடம் ரூ. 1,846—12—9 வரை வழங்கப்பட்டது.

அண்ணா அவர்கள், 'பண பல'த்தால் கழகத்தை வென்று விடலாம் என்று கருதிடும் காங்கிரசாருக்குப் பதில் கூறும் வகையில் மிகச் சிறப்பானதோர் கருத்துரை வழங்கினார்கள்.

அண்ணா அவர்களின் முழக்கம், கேட்டவர் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தலைவர் முடிவுரையுடன் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுச்செயலாளர் அவர்கள், முறையே செவ்வாய்ப்பேட்டைக் கிளை, 3-வது வட்டக் கிளை இரண்டிற்கும், அதிக உறுப்பினர் சேர்த்தமைக்கு வெள்ளிக் கோப்பைகளைப் பரிசுகளாக வழங்கினார்.

சேலம் நகர மக்களிடையே பெரும் விழிப்பேற்பட்டிருக்கிறது என்பதை, நகரத்தில் நடைபெற்ற பொதுக் குழு, பொதுக்கூட்டம் பற்றியே மக்களின் உரையாடல்கள் அமைந்திருப்பதைக்கொண்டு தெரிய முடியும்.

..ப் பிரதமரின்

..சனை நிராகரிப்பு?

கராச்சி, டிச. 30—

..— பாகிஸ்தானிடையே ..ரும் தகராறை ஒருவருக் ..ர் சமாதானமான முறையில் ..சித் தீர்த்துக்கொள்ளலாம் என்ற சீனப் பிரதமர் சௌ-என்-.. தெரிவித்த கருத்தினை ..ன் முழு அளவில் நிரா..தாகத் தெரியவரு..

..இந்தப் பிரச்சினையை ..பாதுகாப்புச் சபைக்கு ..செல்லும் பணியில் தீவிர ..ஸ்தான் ஈடுபட்டிருப்ப..றப்படுகிறது.

..ல் டிட்டோவின் ..முறைச் செயல்கள்!

..வ உண்டுபண்ணுவதாக அமைந்துள்ளதாம்!

பீகிங், டிச. 30—

..மார்ஷல் 'டிட்டோமீது தனது ..லமயான கண்டனத்தையும், ..யத் யூனியனின் தலைமை ..முழு நம்பிக்கையையும் தெரி.., சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை வெளியிட்டிருக்..து.

..ப்பிள்ஸ் டெய்லி'யில், வெளி..ப்பட்ட அவ்வறிக்கையில், 'மார் டிட்டோவின் நடைமுறைச் ..ல்கள் அனைத்தும், கட்சியில் ..வ உண்டுபண்ணுவதாக ..ந்துள்ளது' என்று குறிப்..பட்டிருக்கிறது.

..ரஷ்யா செல்வார்?

லண்டன், டிச. 28—

..பித்து தலைவர் நாசர், அடுத்த ..டில் ரஷ்யாவுக்கு வருகை ..வார் எனக் கூறப்படுகிறது.

..ண்மையில் எகிப்திற்குச் சென்..ந்த ஒரு சோவியத் செஞ்சிலு..ச் சங்கத் தூதுக் குழுவிடம், ..ற 1957-ம் ஆண்டில் கண்டிப்..தாம் ரஷ்யா வருவதாக ..யளித்திருந்தாராம்.

..ட்டுகிறார்— எச்சரிக்கிறார்!

விவசாயிகளுக்கு ஆசை வார்த்தைகள் கூறுகிறார்

கோவை, டிச. 30—

மிராசுதாரர்கள், தங்களுக்குள் ஒரு கட்சியை நிறுவிக்கொண்டு சர்க்காரின் உத்தேச நிலச் சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய விரும்புகின்றனராம்!

வெள்ளத்தைக் கையால் தடுக்க ..யற்சிப்பதுபோலிருக்கும் இச் ..ய்கை, நிச்சயமாகப் பலிக்கா..ம்! அவர்களுக்கே தீங்காகவும் ..டியுமாம்!

இவ்வாறெல்லாம், தமிழ் நாடு ..ட்டுறவு மாநாட்டையொட்டி ..டைபெறும் கண் காட்சியைத் ..துவைத்துப் பேசுகையில் நிதி ..மச்சர் சுப்பிரமணியம் எச்சரித்..ளார்.

..பரும்பாலான விவசாயிகள் ..சாயத்தை மட்டும் நம்பியிருக்க ..யாது என்றும், அவர்கள், விவ..ம் நடைபெறாத காலங்களில் .. குடிசைத் தொழில்களைக் ..டுறவு முறையில் மேற்..ண் ..ல்லது — வரு..ம் ..

நிறவெறியின் விளைவு

நீக்ரோ மாதுமீது துப்பாக்கிப் பிரயோகம்

மாண்ட்கோமரி, டிச. 29—

தென் அமெரிக்கப் பகுதிகளில், வெள்ளையர்களின் நிறவெறிச் செயல்கள் மீண்டும் அதிகரிக்கத் துவங்கியிருக்கிறது.

இங்கு புதிதாகவந்த பிரயாணிகள் பஸ் ஒன்றில் ஏறிச்சென்ற ஒரு இளம் நீக்ரோ மாதை, முகமூடி அணிந்த சில வெள்ளையர்கள் துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள்; துப்பாக்கிக் குண்டுகள், அம்மாதுவின் இரண்டு கால்களிலும் பாய்ந்து படுகாயப்படுத்தியுள்ளதாகச் செய்தி ஒன்று தரப்படுகிறது.

இந்த வெறிச் செயலைக் கண்டித்த ஒரு வெள்ளையரையும் அந்த வெறியர்கள் பலமாக அடித்துக் காயப்படுத்தினராம்.

22 வயதான ரோசா ஜோர்டன் என்ற அந்த நீக்ரோ மாதுவின் நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அல்ஜீரியாவில் கலவரம்

நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவப் பாதுகாப்பு

அல்ஜீரியா, டிச. 29—

அல்ஜீரியாவிலுள்ள ஐரோப்பியருக்கும் — முஸ்லீம்களுக்குமிடையே கலவரம் ஏற்பட்டு, அதன் விளைவாக எழுந்துள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவப் பீரங்கிப் படைகளும் ஆயுதந்தரித்த கார்களும் அப்பகுதிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவாம்.

கலவரப்பகுதியில் பெருமளவில் போலீசார் பாதுகாவலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனராம்.

பதவியிலிருந்து ஐ.சி.எஸ். அதிகாரிக்குச் சீட்டு!

புதுடில்லி, டிச. 29—

பொதுச் சொத்துக்களைக் கையாடினார் என்பதற்காக எஸ். கே. கோஷ் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி ஒருவர் அப்பதவியிலிருந்து நீக்கப் பட்டிருக்கிறாராம்.

அவர், தமது பதவி நீக்க உத்தி.. ..செய்துகொண்ட.. ..நீதி..

அண்ணா

என். வி. நடராசன்

சுற்றுப்பயண நிகழ்ச்சி:

★

ஜனவரி

1: மாலை—குளித்தலை நிதி அளிப்புக் கூட்டம்;

2: காலை 10 மணி-திருப்பூர் நிதி அளிப்புக் கூட்டம்

டாக்டர் அம்பேத்கார் மறைவு

அனுதாபக் கூட்டம்

1—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை 19-வது வட்ட தி. மு. கழகம்—வள்ளுவர் மன்றம் ஆகியவைகளின் சார்பில், ஓட்டேரி — வாழைமாநகரில் (தபால் நிலையம் எதிரில்), தோழர் ஏ. எம். வரதராசன் தலைமையில் மேற்படி அனுதாபக் கூட்டம் நடைபெறும்; தோழர் ஏ.வி. பி ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவர்.

பிச்சைக்காரர்கள் மாநாடு!

மத்திய பர்மாவிலுள்ள பகான் எனுமிடத்தில், பர்மா முழுமையிலுமுள்ள பிச்சைக்காரர்களடங்கியமாநாடு ஒன்று நடைபெற்றுவருகிறதாம்!

அம்மாநாட்டுக்கு வந்துள்ள பிரதிநிதிகளெல்லாம் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்களென்றும், அவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்த குருக்களின் சீடர்களென்றும் கூறப்படுகிறது!

பிச்சைக்காரர்களுடைய 'தொழிலை'த் திருத்தி அமைத்து, அவர்களெல்லாம் நாட்டின் நல்ல குடிமக்களாக மாறி, நாட்டின் நலனுக்கு உழைக்குமாறு செய்வதில் பர்மிய சர்க்கார் பெருமுயற்சி செய்துள்ளதாகத் தெரிகிறது.

வாக்குப்பதிவில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

..துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர் என்று கூறப்படுகிறது.

ஓட்டுச் சீட்டுகள் அளிக்கப்படு முன், ஒவ்வொரு வாக்காளரின் கையெழுத்தோ, கட்டை விரல் அடையாளமோ பெறப்படும் என்றும், இந்த முறை ஓரளவுக்கு கள்ளத்தனமாக வாக்குப்பதிவு செய்வதைத் தவிர்க்கப் பயன்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

1—1—57 செவ்வாய் பகல் 2 மணிக்கு

விளையாட்டுப் பகுதித் தலைவர்:
திரு. எம். இராதாகிருஷ்ண பிள்ளை பி.ஏ., பி.எல்.

பரிசு வழங்குபவர்:
திருமதி இராஜாம்பாள் கருடராஜன் எம்.ஏ., எல் டி., ஜே..

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், தந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை—இன்னும் பல

★

சகுந்தலா கலை அரங்கில்—மாலை 6-மணிக்கு
அசோக் விஹார் அளிக்கும்
'இராணி மனோரமா' தமிழ் சரித்திர நாடகம்

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

பிப்ரவரி 1-ந்தேதியன்று வெளிவருகிறது!

தென்னவருக்கோர் தேன்கூடு! திங்கள் ஒருமுறை
எழில் பரப்ப வரும் இலக்கியச் செங்கரும்பு!

ஆசிரியர்:
தாரகை ஏ. கே. வில்வம்

அண்ணாவின் வாழ்த்துக்களோடு வெளிவரும் முதல் இதழில் உங்கள் இதயத்திலே இடம் பெற்ற அத்தனை எழுத்தாளர்களும் எழுதுகின்றனர்!

விலை அணா 4

தென்னகமெங்கும் முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை

நிர்வாகி: 'தாரகை' 2/27, அஜீஸ்முல்க் தெரு சென்னை-6

அஸ்வான் அணைக்கட்டு

மீண்டும் அமெரிக்க உதவி?

கெய்ரோ, டிச. 29—

எகிப்துக்குப் பொருளாதார உதவி தருவது குறித்து, கெய்ரோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர், எகிப்திய நிதி அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார் என்று தெரிகிறது.

அஸ்வான் அணைக்கட்டுக்கென அளிக்கப்பட்டுவந்த உதவியை பிரிட்டன் நிறுத்திக் கொண்டதும் அதைத் தொடர்ந்து அமெரிக்காவும் தான் அளித்துவந்த உதவியை நிறுத்திக் கொண்டதுமே, சூயஸ் கால்வாய்மீது தகராறு எழுவதற்கான காரணமாக அமைந்தது என்று நாசர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இப்போது, அஸ்வான் அணைக்கட்டுக்கு, தான் இதுவரை அளித்துவந்த பொருளாதார உதவியை அமெரிக்கா தொடர்ந்து அளித்துவரக் கூடுமெனத் தெரிகிறது.

கிராக்கிப்படி உயர்வு

எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைப்பதற்கு உத்தரவு

பள்ளி ஆசிரியர்களுக்கு 'கிராக்கிப்படி' உயர்வு அளித்து சர்க்கார் முன்பு பிறப்பித்த உத்தரவின் கீழ்வராத சிலவகை ஆசிரியர்களுக்கும் அந்த 'கிராக்கிப்படி' உயர்வு உண்டு என்று சர்க்கார் இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இந்தப் புதிய உத்தரவு நவ. 1-ந் தேதியிலிருந்து அமுலாகும். இதனால் ஏற்படும் செலவில் பாதியை சர்க்கார் தருவர்.

பட்டதாரி ஆசிரியர்கள், பண்டிதர்கள், தொழில் கல்வி போதிப்பவர்கள், சங்கீத ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பள்ளி சிப்பந்திகள் ஆகியவர்களுக்கும் இந்த உயர்வு கிடைக்கும்.

சில பிரிவு ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ள சம்பள உயர்வு, 45-2-85 சம்பளவிகிதத்துக்குமேல் பெறும் ஆசிரியர்களுக்கும் உண்டு எனத் தெளிவாக்கியுள்ளனர்.

உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், தனிப்பள்ளிகள், ஆங்கிலோ—இந்தியர் பள்ளிகள், நடுத்தர, உயர்தரப்பள்ளிகள் ஆகியவற்றைச்சேர்ந்த ஆசிரியர்களும் ரூ. 5 கிராக்கிப்படி உயர்வு பெறுவர்.

சிங்கப்பூருக்கு சுதந்திரம்

விரைவிலேயே கிடைக்குமென.. முதலமைச்சர் நம்பிக்கை

சென்னை, டிச. 28—

'சிங்கப்பூர் சுதந்திரம் அடை..தற்கு இன்னும் வெகுநாட்..இல்லை' என்று சென்னை வந்து.. சிங்கப்பூர் முதலமைச்சர் லிம்..ஹாக் கூறியிருக்கிறார்.

பிரிட்டனுடன் மேற்கொண்..பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு வருகிற மார்ச் மாதத்தில் ஒரு தூதுக் குழு சிங்கப்பூரிலிருந்து செல்லும் எனறும் அவர் தெரிவித்திருக்கிறார்.

****

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜனவரி	ஜனவரி
3: கோவை நகர்	19: கணியூர்
15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	20: மதுரை நகர்
16: காஞ்சிபுரம்	21: திருச்சி நகர்
17: சேலம் நகர்	22: குமாரபாளையம்
18: உடுமலை	23: போளூர் வ.ஆ.
	24: விழுப்புரம்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.